# 4 கடைகளின் கட்டுமானப் பகுதிகள்

# மாநகர் மன்றத்தால் இடித்துத் தள்ளப்பட்டன

கோலாலம்பூர், ஜன. 18-

பண்டார் துன் ரசாக்கில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நான்கு கடைகளின் கட்டுமானப் பகுதி கோலாலம்பூர் மாநகர் மன்றத்தால் இடித்துத் தள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த மீட்புப் படை இலாகா, தெனாகா நேஷனல் பெர்ஹாட், ஆயர் சிலாங்கூர் நிறுவனம், பொது சுகாதார கழிவு நிர்வாகக் கழகம் ஆகியவை கூட்டாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது



நடவடிக் கையின்போது அனுமதியின்றி அரசாங்கத்திற் குச் சொந்தமான நிலத்தில் கட் டுமானத்தை மேற்கொண்ட பகுதிகள் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினரால் இடித்துத் தள்ளப்பட் டதாக அது வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

போலீஸ், தீயணைப்பு - இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அந்த அறிக்கை கூறியது.

சாலையில் அரசாங்கத் திற்குச் சொந்தமான நிலத்தில் அந்தக் கட்டுமானப் பணிகள் அமைந்திருந்ததால் 1974ஆம் ஆண்டு சாலை, கால்வாய், கட்ட டச் சட்டத்தின் கீழ் அவை இடித்து தள்ளப்பட்டதாகவும் அது கூறியது.